மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : புறநகர் வழித்தடங்களில் பேருந்து பணிகளை இயக்கியதன் மூலம் 1970-71-ஆம் ஆண்டில் வசூலான மொத்தத் தொகை ரூபாய் 67,57,975 ஆகும்.

திரு. என். கிட்டப்பா : இந்தத் தொகை அதற்கு முந்திய ஆண்டை விட குறைவானதா, அதிகமானதா என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அந்த விவரம் இல்லை.

Nagercoil–Trivandrum buses

* 115 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) the total number of buses operated by the Tamil Nadu Government between Nagercoil and Trivandrum; and

(*b*) whether night services are to be introduced in this route?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) தமிழ்நாடு அரசுப் போக்கு வரத்துத் துறை, நாகர்கோயில்—திருவனந்தபுரம் வழித்தடத்தில் 13 பேருந்துப் பணிகளை நடத்தி வருகிறது. நாகர்கோவில்—திருவனந்தபுரம் வழித்தடத்தை இணைக்கும் கன்னியாகுமரி—திருவனந்தபுரம் வழியே செல்லும் ஒரு பேருந்துப் பணி இதில் அடங்காது.

(இ) இல்லை.

அரசு மருத்துவர்களின் குடியிருப்புகள்

* 91. வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

டாக்டர்கள் தாங்கள் பணிபுரியும் அரசாங்க மனைகளிலிருந்து குறிப்பிட்ட தூரத்திற்குள் தங்கள் குடியிருப்புகளை வைத்துக்கொள்ள வேண்டுமென்ற விதி ஏதேனும் ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தமிழ்நாடு மருத்துவ நடைமுறைச் சட்டத்தின்படி, அரசினர் மருத்துவ மனைகளிலுள்ள மருத்துவ அதிகாரிகள் தங்களுக்கு அரசாங்கக் குடியிருப்பு இல்லங்கள் அளிக்கப்படாவிட்டால், தங்கள் வசதிப்படி நோயாளிகளுக்கு பகலிலோ, இரவிலோ மருத்துவ உதவி அளிக்கத் தயாராக மருத்துவ மனைகளுக்கு அருகிலேயே குடியிருக்க வேண்டும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS